DILKA WATCH
&
RADIO WORKS
Specialist in Watch &
Radio Repairs
★
284, STANLEY ROAD,
(Near Vanavil Cool Bar)
JAFFNA.
★ BRANCH:
Kandy Road,
Chavakachcheri.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

டில்கா வாச் வேக்ஸ்
அன்
றேடியோ வேக்ஸ்
சகல மணிக்கூடுகள்,
றேடியோக்கள்
உத்தரவாதத்துடன்
திருத்தப்படும்.
284, ஸ்ரான்லி வீதி,
(வானவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
★ கிளை: கண்டி வீதி,
சாவகச்சேரி.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 30 திங்கட்கிழமை (15 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 352

## 5 மைல் தூரம் செல்லக்கூடிய ஆயுதங்கள் புலிகள் கையில்

லண்டன், நவ. 15

பூநகரி முகாம் அழிப்பின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 5 மைல் தூரம் சென்று தாக்கக் கூடிய கனரக ஆயுதங்களும் அடங்கும். இந்த ஆயுதங்களைக்கொண்டு தமது சுற்றிவளைப்பில் உள்ள இராணுவ, கடற்படை முகாம்களை புலிகள் தாக்கலாம். இதனாலேயே கொழும்பு படைத்துறைத் தலைமையகம் கவலை கொண்டுள்ளது.

பி. பி. ஸி. கொழும்பு முன்னாள் செய்தியாளர் கிறிஸ்மொறிஸ் பி. பி. ஸி. தென் கிழக்காசிய சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 20 வருட காலத்தில் புலிகள் பெரும் வெற்றியை பூநகரியில் ஈட்டி உள்ளனர். இதன் மூலம் படையினருக்கு எதிரான போராட்ட வளர்ச்சியில் குறிப்பிட்ட அளவு மட்டத்துக்கு அவர்கள் வளர்ந்துள்ளனர்.

முன்னர் சிறு ரக ஆயுதங்களை வைத்துப் போராடிய விடுதலைப் புலிகள் தற்போது கனரக ஆயுதங்களுடன் பலம் பெற்று விட்டனர்.

இப்படி கிறிஸ்மொறிஸ் தெரிவித்தார். (இ-3)

## ஊரடங்கு

கொழும்பு, நவ. 15

ஊடமாகாணத்தில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று நண்பகல் அறிவித்தது. (இ-எ)

## நகரை வட்டமிட்ட புக்காரா

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்றுக் காலை 8 மணியளவில் 'புக்காரா' விமானம் ஒன்று யாழ். நகரைச் சுற்றி பல தடவைகள் வட்டமிட்டதால் மக்கள் பதற்றமடைந்தனர். (இ-162)

## படையினரின் உறவினரால் அரசுக்கு பெரும் நெருக்கடி

கொழும்பு, நவ. 15

பூநகரியில் உயிரிழந்த படையினர் பற்றிய விவரங்களை அறிவதில் படையினரின் உறவினர்கள் கடந்த சில தினங்களாக ஈடுபட்டு வருகின்றனர். எனினும் பயன் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி முகாம் தகர்ப்பில் பெரும் எண்ணிக்கையான படையினர் கொல்லப்பட்டுள்ள போதிலும், கொல்லப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இதனால் இந்த முகாமில் கடமையாற்றிய சுமார் 2 ஆயிரம் சிப்பாய்களின் உறவினர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள இராணுவ முகாம்களிலும் —

வவுனியாவில் உள்ள இராணுவ முகாமிலும் விசாரித்து வருகின்றனர்.

இராணுவ முகாம்களுக்கு சிப்பாய்களின் உறவினர்கள் தினமும் படை எடுத்துவருவது அரசுக்கு பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

உயிரிழந்த படையினர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை விவரம் வருமாறு.

பூநகரிக்கு மேலதிகமாக அனுப்பப்பட்ட

(4 ஆம்பக்கம் பார்க்க)

# பூநகரி தளத்தில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் 25 கோடி ரூபா பெறுமதியானவையென்று மதிப்பீடு

## ஹமில்டனின் மற்றும் ஒரு மருமகனும் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 15

பூநகரியில் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த படையினரில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் சகோதரியின் புதல்வரான மேஜர் பந்துல வனசிங்காவும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாத ஆரம்பத்தில் கிளாலி நோக்கி மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது ஹமில்டனின் மற்றும் ஒரு மருமகனான கப்டன் நலின் ஜெயதிலக்கா என்பவரும் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹமில்டன், குடும்பத்துக்கு ஒரு மாத காலத்தில் ஏற்பட்ட இரண்டாவது பேரிழப்பு இதுவாகும். (இ-எ-3)

## செயலகம் தொடர்ந்து அதே இடத்தில் இயங்கும்

### சில பிரிவுகள் மட்டும் இடம் மாறும்

யாழ்பாணம், நவ. 15

'சுப்ப சொனிக்' விமானத் தாக்குதலினால் சேதம் அடைந்த யாழ். செயலகம் தொடர்ந்து அதே இடத்திலேயே இயங்கும். அதன் ஒரு சில பிரிவுகள் மட்டும் இடம் மாற்றப்பட உள்ளன.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

வேலணை உதவி அரச அதிபர் அலுவலகம், மற்றும் திட்டமிடல், காணி சுவீகரிப்பு போன்ற பிரிவுகளே சுபாஸ் ஹோட்டலுக்கு இடம் மாற்றப்பட உள்ளன.

புனர்வாழ்வுப் பிரிவை எங்கு இயங்க வைப்பது என்பது குறித்து இதுவரை முடிவு செய்யப்படவில்லை

மேல்மாடியில் இயங்கிவந்த அரசாங்க அதிபரின் அலுவலகம் கீழ்மாடிக்கு இடம் மாற்றப்பட உள்ளது.

செயலகத்தின் சகல பிரிவுகளின் தலைவர்களும் இன்று கூடி செயலகப் பிரிவுகளின் இடம் மாற்றங்கள் குறித்து முடிவு செய்ய உள்ளனர். (இ-3-162)

## செயலகம் இயங்க ஒரு வாரம் செல்லும்

யாழ்ப்பாணம், நவ. 15

குண்டு வீச்சினால் சேதமடைந்த யாழ். செயலகத்தின் வேலைகள் வழமை நிலைக்குத் திரும்ப இன்னும் ஒரு வாரகாலம் செல்லும் எனவே பொதுமக்கள் தமது அன்றாட அலுவல்களுக்காக அடுத்த வாரம் முதலே செயலகத்துக்கு வருமாறு யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

செயலகத்தில் குண்டு வீச்சினால் ஏற்பட்ட இடிபாடுகளை அகற்றும் வேலைகள் நேற்றும் நடைபெற்றுவந்தன. (இ-3)

## கோமாரியில் தபால்கள்

கொழும்பு, நவ. 15

''கோமாரி'' கப்பல் மூலம் தபால் பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன என்று கொழும்பில் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையை வந்தடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 3,500 பரல் மண்ணெண்ணையும் கோமாரியில் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-3)

## மூச்சந்தி முரளி



இராணுவத்திடம் ஆயுதங்களை எடுத்து அவைக்கே திருப்பி அடிக்கிற கெட்டித்தனம் வேறு எங்கு இருக்கு பாருங்கோ!

## மாண்ட படையினர் 750 பேர்; காணாமற் போனோர் 150 பேர்

கொழும்பு, நவம்பர் 15

பூநகரித் தளத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய போர் ஆயுதங்களின் பெறுமதி 25 கோடி ரூபாவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டிருந்ததாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இதேவேளை விடுதலைப் புலிகள் மூன்று நாட்கள் நடத்திய மரண அடித் தாக்குதலில் 750 ஸ்ரீலங்காப் படையினர் மாண்டதாகவும், 150 பேர் காணாமற் போனதாகவும் ஜெர்மன் வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த பூநகரி இராணுவ - கடற்படை கூட்டுத் தளத்தில் இருந்து மிக மிக ஏராளமான ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவற்றின் பெறுமதி சுமார் 25 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலின்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## வரணிப் பகுதியில் நேற்று சுப்பசொனிக் குண்டு வீச்சு

### 6 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்று மாலை 4. 40 மணியளவில் இரு 'சுப்பசொனிக்' விமானங்கள் வரணி குடம்பியன் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு பொது மக்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வரணியை சேர்ந்த என். நாகேஸ்வரி (18 வயது), இராசபூபதி (21 வயது), கே. புஸ்பமலர் (19 வயது), எ. சிவகுமார் (17 வயது.) எல். இராசினி ((13 வயது), வி. இராசம்மா (65 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (இ-9-3)

## களப்பலியான மாவீரருக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி

### 3 ஆவது நாளாக நாடுநாடு சோகமயம்

யாழ்ப்பாணம், நவ. 15

பூநகரி — நாகதேவன்துறை கூட்டுத்தளம் தகர்ப்பில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கு தமிழீழ மக்கள் நேற்று 3 ஆவது நாளாக தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

தென்மராட்சி சிறப்புப் பொறுப்பாளர் குணாவின் வித்துடல் நேற்றுக் காலை கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்திய பின் வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து அவரது வித்துடல் விடுதலைப் புலிகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடனும், விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியை கைப்பற்றுவதற்கு ஜனவரியில் பெரும் தாக்குதல்?

### கிழக்கில் தேர்தலை நடத்தவும் உதவுமாம்

கொழும்பு, நவ. 15

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வடக்கில் பெரும் இராணுவ தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இராணுவத் தளபதி சிசில் [illegible] திட்டமிட்டிருப்பதாக கொழும்புச் செ[illegible] விக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதில் ஜனாதிபதி தீவிர அக்கறை [illegible] களை விடுதலைப் புலிகள் [illegible] வதற்கு ஜனவரியில் வடக்கில் ஒரு பெரும்தாக்குதலை நடத்துவதே இராணுவத் தளபதியின் உத்தி என்றும் அச்செய்திகள் கூறுகின்றன.

[illegible] க்கில் பெரும் தாக்குதலை நடத்தினால் கிழக்கின்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## 1, 250 படையினர் தரை - இறக்கம்!

கொழும்பு, நவ. 15

பூநகரி படைத் தளத்தை அழித்து விட்டு விடுதலைப் புலிகள் போராளிகள் அங்கிருந்து வெளியேறியதை அடுத்து 1,250 படையினர் பூநகரியில் தரை இறக்கப்பட்டுள்ளனர்.

கொமாண்டோக்கள் தலைமையிலான 800 படையினர் நேற்று முன்தினம் பூநகரியின் மேற்குக் கரையோரமாக முதலில் இறக்கப்பட்டனர் என்றும் —

நேற்று மேலும் 450 பேர் இறக்கப்பட்டனர் என்றும் — கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை செயலகம் அறிவித்தது.

பூநகரியில் இறங்கிய படையினர் முதல் வேலையாக அங்கு காயம் அடைந்த நிலையில் கிடந்த சிப்பாய்களை மீட்கும் வேலையில் ஈடுபட்டனர் என்றும் —

கொல்லப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கையை மதிப்பிடும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

## படையினரின் சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன

### அஸ்தி மட்டும் உறவினருக்கு

பூநகரியில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படமாட்டா.

சடலங்களை அங்கேயே வைத்து தகனம் செய்துவிட்டு அஸ்தியை மட்டும் உறவினரிடம் அனுப்புவதற்கு ராணுவத் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

சடலங்கள் எடுத்துச் செல்ல முடியாதவாறு அழுகிக் கிடப்பதே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

## படை முகாம்களுக்கு புலிகளால் ஆபத்து

### பி. பி. ஸி. செய்தியாளர் கூறுகிறார்

தாக்கி அழிக்கப்பட்ட பூநகரி இராணுவ - கடற்படை கூட்டுத்தளத்தில் புலிகள் கைப்பற்றிய பெரும் எண்ணிக்கையான நவீன ஆயுதங்களினால் பெரும் ஆபத்து உருவாகி உள்ளது என்பதை வட பகுதியில் உள்ள ஏனைய இராணுவ தளங்களும் உணர்ந்துள்ளன.

கொழும்பில் இருந்து பி.பி.ஸி. செய்தியாளர் சியாகோநுவாஸ் முன்கண்டவாறு அறிவித்திருக்கிறார்.

தனிநாடு கோரி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக போராட்டம் நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பூநகரித் கூட்டுப்படைத் தளத்தின் வீழ்ச்சியும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமையும் மாபெரும் வெற்றியாகும் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

நான்கு நாள் புலிகளின் முற்றுகையின் பின்னர் அரச படையினர் பூநகரி முகாமை மீண்டும் சென்றடைந்தனர் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-எ)

## ஆலயம், செயலகம் மீது குண்டு: துரதிர்ஷ்டமானது என்கிறார் ஹமில்டன்

கொழும்பு, நவ. 15

யாழ். செயலகம் மற்றும் கிறிஸ்தவ தேவாலயம் விமானப்படையினரால் தாக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது.

இப்படிப் கூறுகிறார் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா.

'சுப்பசொனிக்' விமானங்கள் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் மேற்கொண்ட தாக்குதலில் அவை சேதமடைந்தது தெரிந்ததே. (இ-6-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புதிய இரும்பு அலுமாரி (Steel Cub Board) இரு லாச்சிகளுடன் மற்றும் வீட்டு தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. டாஸ் கொம்பிளெக்ஸ் இல. 161, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகில்)
(6802)

5 கிலோ வற் (K. W.) டைனமோ சிங்கிள் பேஸ் (Single Phase) விற்பனைக்குண்டு. SHARP கடைச்சல் தொழிற்சாலை, 208, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (28048)

### இலவச ஜாதகபலன்

உங்கள் பிறந்த திகதி நேரம், பிறந்த இடம், பெயர் ஆகிய விவரங்களை அனுப்பி தற்போதுள்ள ஜாதக பலன் நன்மை தருமா என்பதை ஒரு வாரத்துக்குள் தபால் மூலம் பெற உடன் தொடர்பு கொள்ளவும். சோதிடர், "சிவா" 712, நாவலர் வீதி, அரியாலை.
(28051)

### தேவை

பேக்கரி வேலைக்கு அனுபவம் உள்ள ஒருவர் (வாஸ்) தேவை. அடையாள அட்டையுடன் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். துர்க்கா பாணகம், நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் பருத்தித்துறை வீதி, நீர்வேலி.
(6599)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3 இல் இருந்து O/L வகுப்புவரை சகல பாடங்களுக்குமான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம்.
(28040)

### திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி.
(சி-6176)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகமுத்து சிவப்பிரகாசம்**

(கெக்கிராவ, பீ. சுப்பிரமணியம் சகோதரர்கள் பங்காளரும், சமாதான நீதிவானும், சண்டிலிப்பாய் அம்பாள் அரிசி ஆலை உரிமையாளரும்)

தோற்றம்:
05 — 02 — 1918
மறைவு:
03 — 11 — 1986
திதி:
15 — 11 — 1993

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, சகோதரர்,
மைத்துனர்,
மருமக்கள்.

சீரணி
நாகம்மாள் கோவிலடி,
சண்டிலிப்பாய்.
(28006)

---

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத
ஜி. சீ. ஈ. (உயர்தரம்) பரீட்சைக்கான
1991ஆம் ஆண்டு ஏப்ரல்

## விசேட பரீட்சை

இப்பரீட்சையில் பாதிப்பு அடைந்த மாணவர்கள் சார்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக எம்மால் மேற்கொள்ளப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் எம்மோடு தொடர்பு கொண்ட பெற்றோர்களையும், இப் பரீட்சையினால் பாதிப்பு அடைந்த வர்த்தகம், கலை, உயிரியல் மாணவர்களையும் 18 – 11 – 1993ஆம் திகதி பிற்பகல் 4-00மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் வழமையாகக் கூடும் இடத்திற்குச் சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இணைப்பாளர்,
நடவடிக்கைக் குழு சார்பில்.

24, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி-6351)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
28 — 09 — 1913

மறைவு:
27 — 10 — 1992

**திருமதி மகேஸ்வரி செல்வநாயகம்**

திதி: 15 - 11 - 1993

மங்காத மணிவிளக்கே! எங்கள் அம்மா
மங்காமல் மறைந்தடையோ
மகேஸ்வரி எனும் நல்லாள்
மாளிகையை விட்டு மறைந்தீரோ
மாறாது மாறாது உங்கள் நினைவு
மனதை விட்டு போகாதம்மா
இப்புவியில் வாழும் வரை
உங்கள் நினைவு மறக்காதம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

"மானியம்பதி",
மானிப்பாய். (6806)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
17 — 08 — 1924

உதிர்வு:
16 — 10 — 1993

**திருமதி பாலன் பொன்னம்மா**

எமது குடும்பத்தின் குலவிளக்கான அன்புத் தெய்வத்தின் நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியையும் இன்று (15-11-93) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

எனது அன்புத் தாயாரது மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா. மகேந்திரம்
(அச்சுவேலி மகேந்திரா பெயின்ரிங் வேக்ஸ் உரிமையாளர்)

2ஆம் ஒழுங்கை,
அரசடி,
நல்லூர். (28031)

---

## அறிவித்தல்

இன்று நடைபெறவிருந்த யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் அவை வளர்ச்சி நிதிக்கான

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 02-12-1993 (வியாழக்கிழமை) திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மாணவர் அவை,
தொழில்நுட்பக் கல்லூரி.

[28050]

---

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி
விரிவுரைகள்

## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாட நெறிகளுக்கான விரிவுரைகள் 05 - 12 - 1993 இல் ஆரம்பமாகின்றன.

- கலைமாணி B. A.
- விஞ்ஞான மாணி B. Sc.
(புள்ளி விவரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 02 — 12 — 1993

விண்ணப்பப் படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கடந்த 15 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே.
[சி-6504]

---

## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை-1992

கணக்கியல் தகுதித் தேர்வு (பழைய பாடத்திட்டம்); உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு (இடைக்கால புதிய பாடத்திட்டம்) ஆகியவற்றுக்கான பரீட்சைகள் 1993 – 11 – 22 ஆம், 23 ஆம் திகதிகளில் மு. ப. 9-00 மணி தொடக்கம் நடைபெறும். பரீட்சார்த்திகள் அனுமதிப்படிவத்தைத் தமது மாணவ பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்து 1993—11—19 ஆம் திகதி மு. ப. 9-00 மணிக்குப் பெற்றுக் கொள்ளவும்.

வீ. எஸ். கீதபொன்கலன்.
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம். 1993-11-14. (சி-6361)

---

தொழில்நுட்பக் கல்லூரி

## மாணவர் அனுமதி, 3ஆம் தவணை கால நீடிப்பு

எமது கல்லூரிக்கு 1994ஆம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர் அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 1993-11 22ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் 3ஆவது தவணை 1993-12-05ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகிறேன்.

வீ. எஸ். கீதபொன்கலன்,
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1993-11-14 [சி-6362]

---

கோப்பாய் வடக்கு

## அமரர் சீ. க. சுப்பிரமணியம்
ஆசிரியர்

## சார்பிலான பிரார்த்தனை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது நூல் வெளியீட்டுச் சபையின் ஆரம்பகால அங்கத்தவரும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் பழைய மாணவரும், பிரபல சமூக சேவையாளருமான ஆசிரியர் சீ. க. சுப்பிரமணியம் அவர்கள் 13 – 11 – 1993 சனிக்கிழமை காலை இயற்கை எய்தினார் என்ற செய்தி எம்மைப் பெரிதும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியுறும் வண்ணம் இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றனர்.

பண்டிதை பொன். பாக்கியம்.
தலைவர்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்,
காரியதரிசி.

பண்டிதமணி
நூல் வெளியீட்டுச் சபை,
உடுப்பிட்டி.

[28043]

---

# பலாலியில் இறந்த படையினர்; எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

பலாலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது.

வசாவிளான் பகுதியில் உள்ள இராணுவ நிலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர்.

பலாலி விமானத்தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயர் அதிகாரி ஒருவர் உட்பட 4 படையினரும் பலியானதாக தெரிவிக்கப்பட்டது. (த-எ)

# வாழைச்சேனை பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்கள்!

## தமிழ் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு நவ. 15

பாதுகாப்புக் காரணங்களுக்காக வெட்டியழிக்கப்பட்டு வெட்ட வெளியாக்கப்பட்டதாக கூறப்பட்ட வாழைச்சேனை — நாவலடி வீதியின் இருமருங்கிலும் தற்போது முஸ்லிம்கள் குடியேற்றப்படுகின்றனர். இதற்குப் படையினரின் ஆசீர்வாதமும் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கூறினார் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. கருணாகரன்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சிபிரதிநிதிகளுடனான கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கு திட்டமிட்ட குடியேற்றங்களும் ஒரு காரணம் என்றும் அவர் சொன்னார்.

ஈ. பி.ஆர்.எல். எவ். பிரதிநிதி தேசராசா பேசுகையில் கூறியதாவது;

வாகரை, வாழைச்சேனை ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் இப்போது முஸ்லிம் குடியேற்றங்களாகிவிட்டன. அண்மையில் நடைபெற்ற மாவட்ட புனர்வாழ்வு ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குடியேற்றவாசிகளை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாயினும் தொடர்ந்து குடியேற்றங்கள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார். (த-9)

## பதவி விலகினார்

யாழ்ப்பாணம், நவ. 15

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

தனது பதவி விலகல் பற்றிய கடிதத்தை சங்கத் தலைவருக்கும், பிரிவுத் தலைவர்களுக்கும் அவர் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

# கொள்கை திட்டமிடல் அமைச்சின் மாவட்டப் பணிமனைகள் தொடர்ந்து இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 15

கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் மாவட்ட பணிமனைகள் தொடர்ந்து இயங்கவிருக்கின்றன.

கொள்கைத்திட்டமிடல், பொதுநிர்வாக அமைச்சுக்கள் இது குறித்து முடிவு செய்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் மாவட்ட பணிமனைகளை மூடி, பிரதேச செயலகங்களுக்கு அதன் பணிகளை கையளிப்பது என முன்னர் முடிவு செய்யப்பட்டது.

மாவட்டத்தின் அபிவிருத்தி இணைப்பு, மேற்பார்வை, முன்னேற்றக் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து மாவட்ட பணிமனைகளே இனி மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-3)

# காணாமல் போன 31 மாணவர்கள்; சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடரப்படும்

தென்பகுதி தீவிரவாதம் இடம்பெற்ற காலத்தில் எம்பிலிபிட்டியாவில் 31 பாடசாலை மாணவர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று சட்ட மா அதிபர் ஒப்புக் கொண்டுள்ளார்.

மனித உரிமைகள் பணியகத் தலைவர் ஜே. எப். ஏ. சூலா இத்தகவலை பி. பி. சிக்குத் தெரிவித்தார். (எ-த-6)

# குற்றவாளிகளை நாடுகடத்தும் சட்டமூலம்; அரசு கொண்டு வரும்!

குற்றவாளிகளை இலங்கையில் இருந்து நாடு கடத்துவதற்கு வழிவகுக்கும் சட்ட மூலத்தை அரசாங்கம் கொண்டு வரவிருக்கின்றது.

இத்தகைய பிரஜைகளை நாடு கடத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளை இலங்கை செய்து கொள்ளவிருக்கின்றது.

உத்தரவின் பேரில் ஒரு நாட்டில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படும் குற்றவாளிகள் சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் தாம் பொருத்தமானதெனக் கருதுமிடத்து இத்தகைய குற்றவாளிகளை காவலில் வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பார். (த-எ)

---

உ

வல்வெட்டித்துறை
**ஸ்ரீ வாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி**
தேவஸ்தான

## சூரசம்கார பெருவிழா

நிகழும் ஸ்ரீமுக வருடம் கார்த்திகை மாதம் 4ஆம் திகதி (19 - 11 - 1993) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சூரசம்கார விழா நடைபெறும்.

அன்று மின் இயந்திரங்கள் துணை கொண்டு சக்கரவாகப் பட்சி பறக்கும் சிறப்பு நிகழ்ச்சியும் செந்துருவப் பட்சி, பூமாலை பட்டுகளுடன் முருகனிடம் பறந்து வரும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

[28054]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## எல்லோரும் ஒரே பக்கமே

மண்கிண்டிமலை, கிளாலி, பூநகரி என்று அடுத்தடுத்து வடக்கில் இராணுவம் பெரும் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. ஐந்து மாத இடைவெளியில் நடைபெற்ற இந்த மூன்று தாக்குதல்களிலும் இராணுவத்துக்கு படையினர் கணக்கிலும், ஆயுத வகையிலும் பேரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. மண்கிண்டிமலை ''இதயபூமி''யும் பூநகரித் ''தவளை''யும் இராணுவத்தினரைத் தேடி அழிக்கும் வகை சார்ந்த விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள். கிளாலி ''யாழ்தேவி''யோ படையினர் சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னர் பெரும் எடுப்பில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை. வடக்கு-கிழக்கில் உள்ளது பயங்கரவாதமே. அதனை இல்லாது செய்வதற்கே — விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கே — யுத்தம் நடக்கிறது என்று டி. பியார் கூறியதன் பின்னரே இந்த மூன்று தோல்விகளையும் இராணுவம் சந்தித்தது.

அதாவது தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே காணப்படும். இது விடயத்தில் வெளியார் எவரின் தலையீட்டுக்கும் இடம்கொடுக்கப் போவதில்லை என்ற தனது கொள்கையை—திட்டத்தை—விஜேதுங்கா வெளிப்படையாக அறிவித்த பின்னரே மேற்சொன்ன மூன்று இடங்களிலும் விடுதலைப் புலிகள் தமது வல்லமையைக் காட்டினார்கள்.

ஆனாலும், சிசில் வைத்தியரத்னா போன்ற கடும்போக்காளர்களினதும், பேரினவாதிகளினதும் மந்திரத்தில் மயங்குண்ட விஜேதுங்கா இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்ற உண்மையை உணரவில்லை. பூநகரிப் பெரும் இழப்பின் பின்னராவது அவர் உணர்ந்து திருந்துவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

விஜேதுங்கா மட்டுமென்ன, சிறிமாவோ முதல் இடதுசாரித் தலைவர்கள் வரை இராணுவத் தீர்வையே ஆதரிக்கிறார்கள். விடுதலைப் புலிகளை அடக்கினால்தான், ஓரங்கட்டினால் தான் அரசியல் தீர்வு சாத்தியம் என்ற ஒரு காரணத்தைக் காட்டிக் கொண்டு இராணுவத் தீர்வுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஆதரவாக இருக்கிறார்கள்.

இராணுவத்திற்குத் தோல்வி ஏற்பட்டு, பெரும் எண்ணிக்கையான சிங்கள இளைஞர்கள் களத்தில் மடிந்தவுடன்—

நாட்டைப் போர் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அறைகூவல் விடுவதும் —

பிரபாகரனும் அவரது படையணியினரும் கொழும்பு நோக்கி வந்து விடுவர் என்று அச்சம் காட்டுவதும் — இராணுவத் தீர்வை ஆதரிப்பதாலேயே.

இராணுவத் தீர்வை ஆதரிக்காதவர்கள் என்றால், சிங்கள இளைஞர்கள் வீணே பலியாவதையும் மகாவலி போன்ற நூறு பெரும் திட்டங்களைச் செயற்படுத்தக் கூடிய நிதி வளம் பயனற்ற போருக்கு வீணாவதையும் எடுத்துக் கூறி, அரசுக்கு எதிரான போராட்டங்களை நடத்தலாம் அல்லவா? அப்படி ஒரு சிறு கூட்டமாவது கடந்த மூன்றரை ஆண்டுகளில் தென்னிலங்கையில் நடத்தப்பட்டது உண்டா?

எனவே சிங்களத் தலைவர்கள் எல்லோருமே இராணுவத் தீர்வின் பக்கமே நிற்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அடுத்த வருடம் நடக்கும் தேர்தல்வரை தங்கள் நிலைப்பாட்டை அவர்கள் மாற்றிக்கொள்ளப்போவதும் இல்லை.

அந்த வங்குரோத்து நிலைப்பாட்டை அவர்கள் எப்போது மாற்றுகிறார்களோ அப்போது தான் தமது நாட்டுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை அவர்களால் ஓரளவேனும் தடுக்க முடியும். இதனை உணர்வார்களா அவர்கள்?

# புலிகளை இராணுவ ரீதியாக வெல்லலாம் என்பது அரசின் வங்குரோத்தான கொள்கை

கிளாலியில் இடம்பெற்ற பேரழிவு - என்ற தலைப்பில் "Counterpoint" அக்டோபர் சஞ்சிகையில் வெளியான கட்டுரை இங்கு தரப்படுகின்றது.

''அதிகாரி என்ற முறையில் சிசில் வைத்தியரத்னாவின் திறமையை இதுவரை எவரும் சந்தேகப்படவில்லை. ஆனால் கிளாலி அவருக்கு மேலும் ஒரு பட்டியைச் சூட்ட உதவாது'' — என்று அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது.

யாழ். குடா மக்கள் தென்பகுதியுடன் போக்குவரத்து செய்வதற்கு கிளாலியைத் தவிர வேறு பாதை கிடையாது. கிளாலிப் பாதையை பாவிப்பதை அரசு தடை செய்திருக்கிறது.

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றாக நிராகரித்துள்ள இலங்கை அரசாங்கம், வடபகுதித் தமிழர்கள் தென்பகுதிக்குப் போக்குவரத்துச் செய்யக் கூடிய கிளாலிப் பாதையைத் தடை செய்வதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

முரண்பாடுகள் நிறைந்த அரசாங்கத்தின் கொள்கையில் இது இன்னொரு பாரிய முரண்பாடு என்பது தெரிகிறது.

தென்பகுதிக்கு வடபகுதி மக்களை அனுமதிப்பதற்கு முன்னர் அவர்களை படையினர் பலத்த சோதனைக்கு உட்படுத்த முடியும். அப்படியான சோதனை நடைமுறை தற்போதும் அமுலில் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின்னர் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளதான இனப்பிரச்சினைக்கு, தீர்வு ஒன்றைச் சமர்ப்பிக்காமலேயே விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்ற வாய்ச்சவடால் படுமுட்டாள்தனமான ஒன்றாகும்.

இந்த நிலைப்பாட்டை நிறைவேற்றுவது சாத்தியமற்றது என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தும் அதனை அதிகாரத்தில் இருப்பவர்களோ அல்லது அதிகாரத்தைச் சுற்றி இருப்பவர்களோ வெளியாகச் கூறாதிருப்பதை மன்னிக்க முடியாது.

### படிப்பினை

கிளாலி தந்த முதலாவது படிப்பினை —

போருபாயங்கள் மற்றும் உத்திகளை தயாரிக்கும் நிலையில் இராணுவத் தலைமைப் பீடம் திறமையற்றதாக உள்ளது என்பதும் —

யுத்த களத்தில் அன்றைய பொழுதை வெற்றிகரமாக முடிப்பதானது படையினரின் தனிப்பட்ட வீரதீரத்திலேயே தங்கியிருக்கின்றது என்பதும் — ஆகும்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முடியும் என்ற வங்குரோத்துக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் தலைகளையும் எதிர்பார்ப்பதை அனைவரும் நிறுத்திவிட்டனர். எனினும், இராணுவத் தெரிவின் சாத்தியமற்ற போக்கு இப்போது அரசுக்குத் தெரிந்திருக்கும். கிளாலியில் ஏற்பட்ட துக்ககரமான இழப்பு இராணுவத் தளபதியின் நம்பிக்கையை இன்னும் அசைக்காமல் இருப்பதுதான் மனதைச் சங்கடப்படுத்துவதாக உள்ளது.

### சிசிலின் ஆபத்தான பேட்டி

கிளாலிப் பேரழிவுக்குப் பின்னரும் கூட —

விடுதலைப் புலிகளை அடுத்த ஆண்டு அக்டோபருக்கு முன் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரப் போவதாக —

## பயனில்லாத யுத்தம் தொடர அதன் துணிவின்மையே காரணம்

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா அறிவித்திருக்கிறார். இது ஒரு வெறும் பேச்சாகும். ஆனால் பல உயிர்கள் மீது பல வகைகளில் அதிகாரம் கொண்டுள்ள ஒருவரிடமிருந்து இப்படியான பேச்சு வருவது தான் ஆபத்தானது.

மிதவாதிகள் எங்கிருந்தாலும் — அவர்கள் இராணுவம், அரசாங்கம் மற்றும் வேறு அமைப்புகளில் இருப்பினும் சரி — இது போன்ற குறுகிய கண்ணோட்டம் நிறைந்த வெற்றுப் பேச்சுகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்.

நாட்டில் இனப்பிரச்சினை தான் உள்ளது. அதற்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டும். அப்படியான ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டவுடன், நாட்டில் உள்ள மற்றும் நாட்டுக்கு வெளியே உள்ள தமிழர்களின் கண்களில் விடுதலைப் புலிகள் தங்கள் சட்டபூர்வ அந்தஸ்தை இழந்து விடுவர். அதன் பின்னர்தான் விடுதலைப் புலிகளை நாம் பயங்கரவாதிகள் என்று அழைக்க முடியும்.

அரசாங்கத்தின் கண்களைத் திறக்க இது ஒன்று மட்டும் போதாதா?

### இராணுவத் தீர்வு சாத்தியமற்றது

இன்று அதிகாரத்தில் உள்ளவர்களின் உள்ளங்களில் இருந்து நீதிநெறி முறைகளையும் தார்மீகப் பொறுப்புணர்வையும் சீரிய அரசியல் சிந்

### இருண்ட நினைவுச் சின்னம்

அரசியல் தீர்வு ஒன்றுக்கு தேவையான ஒழுங்குமுறைகளை தெளிவாக வெளியிடக் கூடிய அரசியல் துணிச்சலும் திடசித்தமும் அரசுக்கு இல்லை. இது பயன் ஏதுமற்ற இந்த யுத்தம் தொடரக் காரணமாகிறது.

அதனால் ''யாழ்தேவி'' நடவடிக்கை இராணுவத் தெரிவின் பயனற்ற தன்மையின் இருண்ட நினைவுச் சின்னமாக அமைகின்றது.

(அ-எ)

## அறிக்கை 6 பக்கங்கள் மட்டுமே

கொழும்பு, நவ. 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, வால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஆறு பக்கங்களைக் கொண்டதாகும். (த-எ)

## ஆண்டு இறுதி பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள தேர்வுச் சபையினர் அறிவித்துள்ளனர். (த)

## இன்று

சந்தர்மடம், ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்த மடத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் தலைமையில் திருமுருக கிருபானந்த வாரியாரின் மறைவு குறித்து நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வழிபாடும் நடைபெறும். (த)

★ ★ ★

மயிலணி, நவ. 15

யாழ். இராமநாதன் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் 'வணிக வாணி' மலர் வெளியீட்டு விழா கல்லூரி புதிய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.

## எழுதுநர் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ. 15

அரசாங்க, மாகாண அரச சேவையில் உள்ள எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் 'அ' பிரிவுக்கு நியமிப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சையில் தோற்றும் பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகளை இன்று முதல் யாழ். கல்வி அலுவலகத்தில் பெறலாம் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரையியாகராஜா தெரிவித்துள்ளார். (இ-3)

## ஆங்கிலம் தெரிந்தோருக்கு ஆங்கில ஆசிரியர் பதவி

### பகுதி நேர அடிப்படையில்

அரச பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களையும், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களையும் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கத் தகுதி வாய்ந்தவர்களையும் பகுதி நேர அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்பங்களை தமது சொந்தக் கையெழுத்தில் இரு பிரதிகள் தயாரித்து தாம் விரும்பும் பிரதேசத்திற்குரிய மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்பொழுது பகுதி நேர அடிப்படையில் ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருப்போரும் தவறாது விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறும்—

தவறுவோர் 1994 ஜனவரி முதல் தமது நியமனத்தைப் பெறமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பூநகரி தாக்குதலின் எதிரொலி;

## திட்டமிட்டபடி தேர்தலை நடத்த அரசினால் முடியாது

கொழும்பு, நவ. 15

பூநகரியில் ஏற்பட்ட யுத்தத் தோல்வியால் திட்டமிட்டபடி தேர்தல்களை நடத்த முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பில் அரசியல் பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

துரிதமாக தேர்தலை நடத்துவதற்கு அனைத்து வழிகளிலும் தன்னைத் தயார்படுத்தி வந்த அரசுக்கு ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட துருப்புக்களைக் கொண்ட இராணுவ முகாமைத் தாக்கி கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் மாபெரும் வெற்றி பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட அரசின் புதிய வரவு-செலவுத் திட்டம் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவை தமது கட்சியில் இணைத்துக் கொண்டமை போன்ற நடவடிக்கைகள் தேர்தலை இலக்காகக் கொண்டே அரசால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் வடக்கில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமைகள் அரசின் தேர்தல் பற்றிய எதிர்பார்ப்புக்கு சவாலாக அமைந்துள்ளன — இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ராணுவ கட்டடத்துக்கு அருகில்

## சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய தமிழர் கைது!

கொழும்பு, நவ. 15

கொழும்பு காலிமுகத்திடலில் உள்ள இராணுவத் தலைமையகக் கட்டடத்துக்கு அருகில் நடமாடிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து விசேட பொலிஸ் குழுவிடம் ஒப்படைத்தனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரான அந்த இளைஞரிடம் பிஸ்ரல் ஒன்று இருந்ததாகக் கூறிய பொலிஸ் வட்டாரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த இளைஞரின் அடையாளத்தை வெளியிட மறுத்து விட்டனர்.

இதேவேளை - கொழும்புக்கு வந்திருந்ததாக கூறப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பெண் தற்கொலைப் போராளிகளும், அவர்கள் பற்றிய தகவல் வெளியானதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பி விட்டனர் என்றும் பொலிஸார் கூறினார்கள். (த-எ)

## வடமராட்சியில் பனைவிதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி நடைமுறைப்படுத்தி வரும் பனை நடுகைத் திட்டத்தின்கீழ் புலோலி - பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த மாதம் 15 ஆயிரம் பனை விதைகளை நட்டுள்ளனர்.

அம்பல் - கொட்டோடைப் பகுதியில் 9,100 பனம் விதைகளும், கப்புதூவில் 5,000 பனம் விதைகளும், வல்லிபுரக் கோயிலடியில் 900 பனை விதைகளும் நடப்பட்டுள்ளன.

## யாழ். குடாநாட்டு மக்களின் நிழல் தரும் விருட்சம் 'இணையம்'

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆரம்பித்து இன்றுடன் 3 ஆண்டுகள் முடிவடைகின்றன. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததன் பின்னர், ஸ்ரீலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையினாலும், இராணுவத் தாக்குதல்களாலும் பெரும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு நிழல் தரு விருட்சமாக நின்று கடந்த மூன்று ஆண்டுகளாக யாழ். மாவட்ட அரச நிறுவனங்களின் இணையம் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகின்றது.

யுத்த சூழலில் வாழும் மக்களுக்கு உதவும் பொருட்டு சிதறிக் கிடந்த அனைத்துத் தொண்டர் நிறுவனங்களும் ஒன்றிணைந்து 15 - 11 - 1990 இல் இந்த இணையம் உருவாக்கப்பட்டது. இந்த இணையத்தில் தற்போது யாழ். மாவட்டத்தில் இயங்குகின்ற 16 அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளில் இரட்டிப்பு வேலைகளைத் தவிர்க்கும் பொருட்டு - அங்கத்துவ நிறுவனங்களிடையே புரிந்துணர்வினையும் பரஸ்பர நல்லுறவையும் இணையம் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தனித் தனியாகச் செயல்பட்டு வந்த சர்வதேச - தேசிய - மத-உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத் திட்டங்கள் இணையத்தின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களைச் சரியான முறையில் இனங்கண்டு உதவிகள் சென்றடைய இவ் இணையம் பாலமாக அமைந்துள்ளமையை யாவரும் அறிவர்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் இணையம் ஏற்படுத்திக் கொண்டுள்ள தொடர்புகள்-உறவுகள் காரணமாக, இன்று யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கலாசாரம் ஒன்று துளிர்விட்டமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் புலம்பெயரும் மக்களுக்கு, நிவாரணம் வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்களுக்கான வாழ்விடங்கள், தொழில் வாய்ப்புக்களைப் புனர்வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில் செயல்படுத்தி வருவதற்கும் காத்திரமான பங்களிப்புக்களை உடனுக்குடன் செயல்படுத்திக் கொள்ள இணையம் பாதைகளை வகுத்துள்ளது.

இவ்வகையில், ஆதரவற்ற தாய்மாரின் புனர்வாழ்வுக்கான இணைப்புக்குழு, வலுக்குறைவுற்றோரின் புனர்வாழ்வுக்கான இணைப்புக்குழு, ஒருங்கிணைந்த [illegible] அபிவிருத்தித் திட்டத்துக்கான இணைப்புக்குழு, ஜோர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித்திட்ட இணைப்புக்குழு, போசாக்கு இணைப்புக்குழு, இடம்பெயர்ந்தோர் முகாம்கள் வழிகாட்டல் குழு எனப்பல இணைப்புக்குழுக்களை இணையம் ஏற்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் இணையம் இதுவரை காத்திரமான பங்களிப்புக்களை ஆற்றி வந்துள்ளது. பல்வேறு விதமான கலந்துரையாடல்கள், ஆய்வுப்பட்டறைகள், கருத்தரங்குகளை இணையம் நடத்தி, பொதுப்பிரச்சினைகளில் பொது முடிவுகளைக் கண்டுள்ளது. மேலும், யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் அரச திணைக்களங்களுடனும் இணையம் நல்லுறவுகளைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

யா. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அரச சார்பற்ற நிறுவனங்களின் விவரஏடு ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. அத்துடன் ''நெற்வேக்'' (Network) எனும் தலைப்பிலான ஆங்கில செய்திமடல் ஒன்றினையும் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் அரச சார்பற்ற நிறுவனம் என்றால் என்ன? எனும் தலைப்பில் ஓர் நூலையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வட-கிழக்கு மாகாணங்களில், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமானது ஏனைய [illegible] முன்னுதாரணமாகச் செயல்பட்டு வருகின்றது.

## எனது இந்த வாழ்க்கை புலிகள் போட்ட பிச்சை

### கோபாலசாமி சொல்கிறார்

சென்னை, நவ. 15

அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் நான் தலைவர் பிரபாகரனை காட்டில் சென்று சந்தித்தேன். அந்த சமயத்தில் தி. மு. க. சென்னையில் வெளியிட்ட அறிக்கையினால் நான் காட்டிக் கொடுக்கப்பட்டேன். அதனைத் தொடர்ந்து இந்திய அமைதிப்படை எம்மைச் சூழ்ந்து கொண்டது. அவர்களிடம் இருந்து விடுதலைப்புலிகள் என்னைக் காப்பாற்றினர். இந்திய ராணுவத்தின் குண்டுக்கு ஒரு விடுதலைப் புலிப் போராளியும் பலியானார். எனது இந்த வாழ்க்கை விடுதலைப் புலிகள் போட்ட பிச்சையே.

இவ்வாறு கூறினார் அண்மையில் தி. மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்ட வை. கோபாலசாமி.

அவர் மேலும் கூறியதாவது;

நான் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் இந்திய அமைதிப்படையின் தளபதி கல்கட் தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியை அவர் வீட்டில் சந்தித்துப் பேசினார். அவர் என்ன பேசினார் என்பதைக் கருணாநிதி வெளியிட வேண்டும்.

இச் சந்திப்புக்குப் பின்னர்- ''கோபாலசாமி யாழ்ப்பாணத்துக்குச் சென்றதற்கும், தி. மு. கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவராகவே தான் அங்குசென்றார்''— என மறுநாள் தி. மு. கழகப் பொதுச் செயலர் அன்பழகன் அறிக்கை வெளியிட்டார்.

காட்டில் பிரபாகரனுக்குப் பக்கத்தில் இருந்த எனக்கு இந்தச் செய்தி கிடைத்த போது நான் காட்டிக்கொடுக்கப்படுவதாகப் பதறினேன் என்றார்.

தொடர்ந்து அவர்கூறியதாவது:-

இந்தியப் படையினரால் கிட்டு கொல்லப்பட்டார். அது பற்றி தி. மு. க. எதுவும் கேட்டதா? கிட்டுவின் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றாத தி. மு. கழகம், இந்திரா காந்தியை சுட்டுக் கொன்றவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யுமாறு குடியரசுத்தலைவரை கேட்டுக் கொண்டது — என்றார். (த-5)

மண்ணைப் பாதுகாக்க மரங்களை நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாசி, கடலை விற்போர் புலிகளின் உளவுப் படையினராம்

## சிங்கள நாளிதழ் செய்தி

கொழும்பு, நவ. 15
விடுதலைப் புலிகளின் உளவுப் படையினர் கொழும்பில் அன்னாசி, கடலை விற்பனையில் ஈடுபட்டு உளவு வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் —

அரசியல் தலைவர்கள், படை அதிகாரிகள் ஆகியோரைக் கொலை செய்ய அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர் என்றும் பொலீஸ் தகவல்களை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு காலிமுகக்கடற்கரையில் நடமாடிய விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு முக்கிய உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் —

அவரிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் இலங்கை வரைபடங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளதாகவும் —

பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த நபரின் பெயரை வெளியிட முடியாது எனவும் — பொலீஸார் தெரிவித்ததாகவும் 'திவயின' குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அந்த பத்திரிகையின் பிறிதொரு செய்தியில், விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையை சேர்ந்த இரு பெண்கள் கொழும்பில் இதுவரை காலமும் தங்கியிருந்து, உளவுப் பணிகளில் ஈடுபட்டவர் என்றும் —

அவர்கள் இப்போது யாழ்ப்பாணம் சென்று விட்டனர் என்றும் —

அவர்கள் கொழும்பில் இருக்கும்போது பணக்காரர்கள் போல நடமாடி மிகஉயர்ரக வாகனங்களில் பயணம் செய்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை வயிற்றிலே குண்டைக் கட்டிக் கொண்டு சென்று எதிரியை கொலை செய்து வந்த திட்டத்தை மாற்றி வேறு முறை ஒன்றை பின்பற்றி எதிரியை அழிக்க தற்கொலைப் படையினருக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் புதிய திட்டம் ஒன்றை தயாரித்து வழங்கியுள்ளார் என்றும் பொலீஸாரின் கூற்றை ஆதாரம் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-9)

## பிரேமா கொலை

# 6, 000 பக்கங்கள் கொண்ட குற்றபுலனாய்வு அறிக்கை

கொழும்பு, நவ. 15
முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலைதொடர்பாக விசாரணை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு தயாரித்துள்ள அறிக்கை ஆறாயிரம் பக்கங்கள் கொண்டது என கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## கந்தசஷ்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 15
நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் கந்தசஷ்டித் திருவிழாவை முன்னிட்டு, ஆலயத் தீர்த்த மண்டப கிழக்குப் பகுதியில் திருச்செந்தூர் புராண படனம் நேற்று முதல் நடைபெற்று வருகிறது.

முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும் இப்புராணபடன நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

★ ★ ★

கந்தசஷ்டி விழாவையொட்டி நல்லை ஆதீன கலாமண்டபத்தில் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் சமயப் பேருரை நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நாளாந்தம் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை இச்சமயப் பேருரை நடைபெறும்.

★ ★ ★

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில், கந்தசஷ்டி விழாவையொட்டி நாளாந்தம் ''கந்தவேள் கருணை'' என்னும் பொருளில் தொடர் வில்லிசை நடைபெற்று வருகிறது.

கலாவிநோதன் சின்னமணி நிகழ்த்தும் வில்லிசை தினமும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். (அ-155)

★ ★ ★

சாவகச்சேரி கெருடாவில் கந்தசாமி கோவிலில் கந்தசஷ்டி விழாவில் இலக்கியச் செல்வர் த. நாகேஸ்வரன் கந்தபுராண தொடர் விரிவுரை நிகழ்த்தி வருகிறார். விரிவுரை தினமும் மாலை 5. 30 மணிக்கு ஆரம்பமாகிறது. (அ-117)

# நாடு பிளவுபடுவதை தடுக்க கட்டாய ராணுவப் பயிற்சி

## சண்டே ஐலண்ட் கூறுகிறது

கொழும்பு, நவ. 15
நாடு பிளவுபடக் கூடாது என்று இலங்கை அரசு உண்மையிலேயே விரும்பினால், கட்டாய இராணுவப் பயிற்சியை இலங்கை அரசு உடனடியாக அமுல் நடத்த வேண்டும்.

''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை அரசாங்கத்துக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் இலங்கையில் வறுமையால் வாழும் ஏழை இளைஞர்கள் மட்டுமே இராணுவத்தில் சேர்வதாகவும் —

அரசியலிலும் சமுதாயத்திலும் உயர் நிலையில் இருப்பவர்களின் குழந்தைகள் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் சண்டே ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எத்தனை அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நாட்டிற்காகப் போராடுகிறார்கள் என்றும் அப்பத்திரிகை கேள்வி எழுப்பியிருக்கிறது. (இ-எ)

# கோபாலசாமி கூட்டத்தில் 10 மாவட்ட செயலாளர்கள்

தி.மு. கவில் இருந்து விலக்கப்பட்ட வை. கோபாலசாமியின் ஆதரவாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமைஇரவு திருச்சியில் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் 30 பேரில் பத்துப் பேர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. பொதுக் குழுவின் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவது என்று அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வை. கோபாலசாமியை தி.மு. கவில் இருந்து வெளியேற்றியது செல்லாது என்று அறிவிக்கவும்—

கட்சித் தலைவர் பதவியில் இருந்து கருணாநிதியை நீக்கிவிட்டு அந்த இடத்திற்கு வை. கோபாலசாமியை நியமிக்கவும் — பொதுக் குழுவில் போதுமான பலத்தைத் தம்மால் திரட்ட முடியும் என்றும்—திருச்சிக் கூட்டத்தில் பங்குபற்றிய மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

தி. மு. க. பொதுக் குழுவில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணூறு பேரில் இதுவரை 500 பேர்கள் வை. கோபாலசாமிக்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

வை. கோ.வை கட்சியில் இருந்து நீக்கியதை தி. மு. க. வழக்கறிஞர் சங்கம் கண்டித்துள்ளது.

கட்சியை குடும்ப ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்ற கருணாநிதி பதவி விலகவேண்டும் என்றும் இச்சங்கம் கோரியுள்ளது.

இப்போது வை. கோ. எம். ஜி. ஆர் போல தனிக் கட்சி தொடங்க முயற்சிக்கவில்லை. மாறாகக் கட்சியைக் கைப்பற்ற திட்டமிட்டுள்ளார்.

வை. கோ.வின் திட்டத்தை அறிந்து வைத்துள்ள தி. மு. க. தலைமை, சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள தி. மு. க. தலைமை அலுவலகமான அறிவாலயம் கட்டடத்தை ஊர்ச்சிக் குழுவினர் கைப்பற்றாதிருக்க தம்முடைய சொந்த ஏற்பாடாக ஆயுதந்தாங்கிய காவலர்களை அங்கு நிறுத்தியுள்ளது.

## வீரமரணம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் நடந்த தவறுதலான வெடி விபத்து ஒன்றில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப் புலிகள் போராளியான மேஜர் பூவழகு அல்லது விக்கி (சண்முகநாதன் விக்னேஸ்வரன் – நயினாதீவு) வீரமரணமடைந்தார். (இ-3)

## மரணம்

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதி தியாகராசா என்பவர் நேற்று மாலை உயிரிழந்தார். (இ 3)

## கவப்பலியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரின் பாண்ட் வாத்திய இசையுடனும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு உட்பட 31 மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று மாலை சுன்னாகம் சந்தை முன்றலில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்புவின் வித்துடல் தவிர்ந்த ஏனைய போராளிகளின் வித்துடல்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விதைக்கப்பட்டன. (இ-3)

## அரச அதிபர் ஜனாதிபதியை சந்திப்பார்

யாழ்ப்பாணம், நவ. 15
''சுப்ப சொனிக்'' குண்டு வீச்சில் காயமடைந்த அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இன்னும் ஒரு வாரகாலத்தில் கொழும்பு செல்லவுள்ளார்.

கொழும்பு சென்றதும் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ். குடாநாட்டில் நடத்தப்பட்ட பாதிப்புகளை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு நேரில் எடுத்துரைப்பார்.

குண்டு வீச்சினால் சேதமடைந்த செயலகத்தைத் திருத்துவதற்குத் தேவையான சிமெந்து, அஸ்பெஸ்டஸ் போன்ற கட்டடப் பொருள்களை எடுத்து வருவதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவார். (அ-3)

பூநகரி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
போதும் அங்கிருந்தும் பெரும் எண்ணிக்கையில் ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருந்தனர்.

பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தி, அவர்களிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களால் தமக்கு ஆயுத பலத்தை விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதையே இத் தாக்குதல்கள் கோடி காட்டுகின்றன— என்றும் பி, பி. ஸி. தெரிவித்துள்ளது.

இதேவேளை—

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலில் ஸ்ரீலங்கா படைகளைச் சேர்ந்த 750 பேர் யுத்த முனையில் மாண்டனர். 150 படையினர் காணாமல் போயுள்ளனர். — என்று இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஜேர்மன் வானொலி தெரிவித்தது.

பூநகரிப் பகுதிக்கு போய் சேர்ந்துள்ள புதிய படையினர் தாக்குதலில் காயமுற்ற சுமார் 100 பேரை மீட்டுள்ளதாகவும்—

புதிதாக ஆகக்குறைந்தது ஆயிரம் படையினர் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும்—அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது (அ எ 3–6)

கிளாலியை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மீதான புலிகளின் கவனத்தைத் திசை திருப்ப முடியும் என்பதே அவரின் நம்பிக்கை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு வகை செய்து உதவுவதன் மூலம் இராணுவத்துக்கு அரசாங்கத்திடம் இருந்து நற்பெயர் வாங்கலாம என்பதும் அவரின் நோக்கமாம்.

இராணுவத் தளபதியின் உத்தேச பாரிய தாக்குதல் கிளாலியை கைப்பறித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதையே இலக்காகக் கொண்டிருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை—

எதிர்வரும் ஜனவரி மாதம் வரை வடக்கில் இராணுவம் தாக்குதல் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் இராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்கி உள்ளதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது.

யாழ். மாவட்டத்தில் மழை காலம் ஆரம்பித்துள்ளது. கடந்த 10 வருடங்களாக திருத்தப்படாத பாதைகள் சேறும் சகதியுமாக இருக்கும்.

இப்பாதைகளால் இராணுவ வாகனங்கள்செல்ல முடியாது. ஆகையால் இராணுவ நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டாம் என்று உயர் மட்டம் இராணுவ தளபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது. (அ-3)

படையினரின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
படையினர் தமது நிலையை பலப்படுத்தும் வரையில் இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றி தெரிவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

''உண்மையான நிலை என்ன என்பது பற்றி அதிகாரிகள் ஊர்ஜிதப்படுத்துவார்கள்.

''எனவே உறவினர்களும் பொதுமக்களும் வதந்திகளை நம்பி தவறாக இட்டுச் செல்லப்படக் கூடாது.

''உண்மையான நிலைமை உறுதிப்படுத்தப்பட்ட வுடன் அதிகாரிகள் படையினரின் உறவினர்களோடு தொடர்பு கொள்வார்கள்

''தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டவுடன் இந்தப்பணி உடனடியாக மேற்கொள்ளப்படும்.

''பூநகரி முகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து கலைந்து சென்ற படையினர் பலர் அந்தப் பகுதியில் இருக்கலாம்; அல்லது பாதுகாப்பைத் தேடிச் சென்றிருக்கலாம் என்று தெரியவருகிறது.

''மரணமடைந்த படையினரை அடையாளங் காணும் வேலை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ-6)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதர் கந்தையா
(ஆச்சாரியார்)

சுளிபுரம் பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த வேலாயுதர் கந்தையா (ஆச்சாரியார்) 14 – 11 – 93இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, மாரிமுத்து, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராமசாமி (மலாயன் பென்சனர்), சுப்பையா (சிமெந்து கூட்டுத் தாபனம்), செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசகோபாலின் ஆசை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15-11-93) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சு. இராசகோபால் (மருமகன்)
பத்திரகாளி கோவிலடி,
சுளிபுரம். (28056)

## A. S. மார்க்கண்டு
(சினிமாஸ் லிமிட்டெட் கணக்காளர்)

நீர்வேலியை பிறப்பிடமாகவும், இல 4 மேதர்ஸ் லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட A. S. மார்க்கண்டு 13-11-1993இல் சிவபதமடைந்தார்.

அன்னார் திரு. திருமதி சண்முகம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சுகிர்தமலரின் அன்புக் கணவரும், A. S. M. கிரிதரன் J.P. (நியூ விமாகி New Vemaki நிறுவனம், யாழ்ப்பாணம், Venke Impex நிறுவனம் கொழும்பு ஆகியவற்றின் உரிமையாளர்) அவர்களின் அன்புத் தந்தையும், கலாரோகினியின் அன்பு மாமனாரும், திரு. குமாரசாமி மாஸ்டர் (நீர்வேலி), காலஞ்சென்ற திருமதி ஆறுமுகம் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி குமாரசாமி அன்னலச்சுமியின் மைத்துனருமாவார்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
A. S. M. கிரிதரன் (மகன்).
மானிப்பாய். (28049)

## கந்தையா சதாசிவம்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், நாவலப்பிட்டி - Executive Stassens Exports Ltd, Goorukoya)

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா சதாசிவம் 13 – 11 – 93 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி பராசக்தியின் அன்புக் கணவரும், சிவசக்திநாதன் (கணக்காளர், நமுனுகுல), சதாசக்திநாதன் (விவசாய உத்தியோகத்தர், நுவரேலியா) சிவசக்திதேவி (சேவைக்காலக் கல்வி ஆலோசகர், பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டம்), சிவஜோதி (இங்கிலாந்து — முன்னாள் ஆசிரியை, ஹலண்ட்ஸ் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையும், இந்திரபுவனா, புஷ்பலோஜினி (ஆசிரியை, நுவரெலியா கொன்வென்ட்), கேதீஸ் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும், ரவிந்திரநாத், சிவாங்கினி, சிவதர்சினி, டயானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15-11-93) சிரணிச்சந்தி, சண்டிலிப்பாய் இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செல்வி சிவசக்தி சதாசிவம் (மகள்)
சிரணிச்சந்தி,
சண்டிலிப்பாய். (28055)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15- 11- 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


வல்லை வெயிலூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான
# ஸ்கந்தஷஷ்டி விழா
## சிறப்புச் சொற்பொழிவு

தினமும் மாலை 4 மணி தொடக்கம்

நிகழ்த்துபவர்: "அருள் மொழிச் செல்வர்" "வாகீச கலாநிதி"
கனகசபாபதி நாகேஸ்வரன் M. A. அவர்கள்

★ விடயம்:

| | | |
|---|---|---|
| 14 – 11 – 1993 | ஞாயிறு | நிர்மலக் கடவுள் அவதாரம் |
| 15 – 11 – 1993 | திங்கள் | தாரகன் வதம் செய்த வீரவேல் |
| 16 – 11 – 1993 | செவ்வாய் | சிங்கமுகாசுரனை வதம் செய்த குலிசம் |
| 17 – 11 – 1993 | புதன் | ஆறுமுகனின் திருப்பெரு வடிவம் |
| 18 – 11 – 1993 | வியாழன் | சூரனின் மாயையை அழித்தல் |
| 20 – 11 – 1993 | சனி | தேவியர் இருவரின் வாழ்வு |

(28053) விழா உபயகாரர்கள்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
04
02
1927

மறைவு
16
10
1993



## அமரர் கந்தையா வடிவாம்பிகை

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எமது குல தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரது மரணத்தின் போது எமது துயரங்களில் பங்கு கொண்ட அனைவருக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும், 13 – 11 – 1993 சனிக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று 15 – 11 – 1993 இல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

125/1, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். [28047]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org